**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 263/2019</u>**

**C/W**

**<u>அசல் வழக்கு எண். 268/2019</u>**

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய பத்மா DW.1 இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 05.06.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பத்மா | | |
| Father /Husband Name | : | சங்கர் | Court | : |
| Village | : | தில்லையாடி | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 52/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1. | 18.10.1956 | வாதி, 1ம் பிரதிவாதியின் தகப்பனாரும், 2ம் பிரதிவாதியின் கணவருமான சண்முகம் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் அசல் பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 20.05.2007 | சண்முகம் எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அசல் பிவாசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தில்லையாடி ஊராட்சிக்கு 2ம் பிரதிவாதி செலுத்திய வீட்டுவரி ரசீதுகளின் அசல் (எண்ணிக்கை -3) பிவாசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 4. | -- | எனது தகப்பனார் சண்முகம் பெயரில் உள்ள மின் கட்டண அட்டையில் அசல் பிவாசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5. | -- | எனது தகப்பனார் சண்முகம் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது பிவாசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | 14.06.2019 | மின் வாரிய அலுவலக Consumer Ledger ன் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் பிவாசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 23.05.2019 | வாதிக்கு எதிராக 2ம் பிரதிவாதி கொடுத்த புகாருக்கான மனு ரசீதின் அசல் பிவாசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8. | 03.06.2008 | 1ம் பிரதிவாதியின் தந்தை சண்முகம் பிரகாஷ் மற்றும் பிரசாத் ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பிவாசாஆ** 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.